பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.

மலர்: 20 | சென்னை: ஆடி 3 (18—7—72) செவ்வாய் | வெளியூர்: ஆடி 4 (19—7—72) புதன் | இதழ்: 29

பள்ளியாசிரியர்கள் பணி--தமிழக அரசு ஆணை

சென்னை, ஜூலை 18—

'ஆசிரியர்கள்' என்ற முறையில் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள பணிகள் தவிர வேறு பணிகளை அவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நன்கொடை வசூலிப்பது--குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணி போன்றவை துவக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுவதாக முறையிட்டுக்கொண்டதைத் தொடர்ந்து அரசு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்துக்கு மற்றோர் அநீதி

நாடாளுமன்றத்தில் உரிய இடம் ஒதுக்க டில்லி மறுப்பு

தொழில் அமைச்சர் மாதவன் வெளியிடும் வேதனைமிகு தகவல்

சென்னை ஜூலை 18—

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டுக்கு உரிய இடம் ஒதுக்கும் பிரச்சினையில், தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கையை மத்திய அரசு ஏற்க மறுத்துள்ளது.

குடும்பநலத் திட்டத்தை மற்ற மாநிலங்கள் சரிவரச் செயல்படுத்தாதிருந்த நேரத்தில் தமிழ்நாடு மட்டும் தீவிரமாகச் செயல்படுத்தியதன் பயனாக மக்கள் தொகை குறைந்தது. இதன் விளைவாக, நாடாளுமன்றத்தில், தமிழகத்தின் இடம் 41-லிருந்து 39-ஆகக் குறைக்கப்பட்டுவிட்டது.

தொடர்ந்து தமிழகம் குடும்பநலத் திட்டத்தில் ஆர்வம் காட்டித் தீவிரமாகச் செயல்பட்டு வருவதால், மக்கட் தொகை குறைந்து நாடாளுமன்றத்தில் மேலும் சில இடங்களை இழக்க நேரிடலாம் என்ற அச்சம் உள்ளது.

பத்தாண்டுக்கு ஒரு முறை மக்கட் தொகைக் கணக்கெடுக்கும்போதெல்லாம் குடும்ப நலத் திட்டத்தின் பயனாகத் தமிழகத்தில் மக்கட் தொகை குறையக்கூடும்; அதன் விளைவாக நாடாளுமன்றத்திலும் தமிழகத்தின் பிரதிநிதித்துவம் குறையும் என்பதைத் தமிழக அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, 1951-ம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில், நாடாளுமன்றத்தில் தமிழகத்திற்கு இடம் ஒதுக்குமாறு கோரியிருந்தது; இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க மறுத்துவிட்டதாக இப்போது தகவல் கிடைத்திருக்கிறது.

இத்தகவலைத் தமிழகத் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் மிகுந்த வேதனையுடன் அறிவித்துள்ளார்.

தேசிய வர்த்தகக் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் இத்தகவலை அறிவித்தது.

இத்தொடர்பில் மேலும் கூறியதாவது:—

"தமிழக அரசு மத்திய அரசுடன் முழு அளவில் ஒத்துழைத்து வருகிறது என்றாலும் நாடாளுமன்றத்தில் தனக்குரிய இடங்களைத் தமிழ்நாடு இழப்பது போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன; இப்பிரச்சினையைத் தீர்க்க 1951-ம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத்தில் இடம் ஒதுக்குவது ஒன்றுதான் வழி; ஆனால் மத்திய அரசு இந்த யோசனையைப் புறக்கணித்துவிட்டிருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும்."

எத்தகைய கிளர்ச்சிக்கும் அரசு பணியாது

கேரள அமைச்சர் கண்டிப்பு

கோட்டயம், ஜூலை 18—

"எத்தனை வகையான ஊர்வலங்கள்--ஆர்ப்பாட்டங்கள் நடந்தாலும், தனியார் கல்லூரிக் கட்டணம் பற்றிக் கேரள அரசு எடுத்த முடிவிலிருந்து மாறாது--கிளர்ச்சியாளர்களுக்குப் பணியாது"

என்று கேரள உள்துறை அமைச்சர் கருணாகரன், கோட்டயத்தில் ஆளும் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிறித்துவ மதப் பாதிரியார்களின் பயமுறுத்தலுக்குப் பணியமாட்டோம்; ஏற்கனவே திறக்கப்பட்ட தனியார் கல்லூரிகளை மீண்டும் மூடுவதற்கு முயற்சிகள் நடக்குமேயானால் அரசு அத்தகைய முயற்சியை முழு வலிவோடு எதிர்க்கும்."

கேரளத்தில் நிலப்போர்--1,276 பேர் கைது

திருவனந்தபுரம், ஜூலை 18—

கேரள மாநிலத்தில், கடந்த 54 நாட்களாக நடைபெற்று வருகின்ற தரிசு நிலப் போராட்டத்தில், நேற்று 1,276 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இப்போராட்டத்தை மார்க்சிஸ்டுக் கட்சியினரும்--விவசாயத் தொழிலாளர் கட்சியின் அமைப்பாளர் வடக்கன் பாதிரியாரும் கூட்டாக நடத்திவருகின்றனர்.

"மாநிலம் முழுவதிலும் இந்தக் கிளர்ச்சி, அசம்பாவித சம்பவங்களின்றி அமைதியாக நடைபெற்றது" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருப்பதி கோவிலின் ஆண்டு வருமானம்

ரூ. 9 கோடியாகப் பெருகியுள்ளதாம்

ஐதராபாத், ஜூலை 18—

"திருப்பதிக் கோவிலின் ஆண்டு வருமானம் இப்போது ரூ. 9 கோடியாகும்"

என்று ஆந்திர அறநிலைய அமைச்சர் மூர்த்தி இராசு, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

'டில்லியில் உள்ள ஒரு கல்லூரி உட்பட 15 கல்வி நிறுவனங்களைத் தேவஸ்தானம் நடத்துகிறது; வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்துக்கு ஆண்டுதோறும் ரூ. 2.50 இலட்சம் கொடுக்கிறது; இசை—நாட்டியக் கல்லூரிகள்—சிற்பக் கலைப் பயிற்சி நிலையங்களை நடத்துகிறது" என்றும் அவர் சொன்னார்.

இந்திரா காங்கிரசாரின் சோஷலிச விரோத நடவடிக்கை

மருத்துவக் கல்லூரியில் இடம் தர ரூ. 10,000 நன்கொடையாம்

நாகபுரி, ஜூலை 18—

நாகபுரி மாநகராட்சி ஒரு மருத்துவக் கல்லூரி நடத்துகிறது; அதில் 80 இடங்கள் உண்டு; அவற்றில் 20 இடங்களை நிரப்ப மனுக்கள் கோரப்பட்டிருக்கின்றன.

"ஒவ்வொரு மனுதாரரும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டால், மாநகராட்சிப் பேருந்து நிலையம் கட்டுவதற்குத் தலா ரூ. 10,000 நன்கொடை தர வேண்டும்"

என்று, கல்லூரி முதல்வர் வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்று கூறுகிறது.

நன்கொடை வசூலிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 20 இடங்களும் தகுதியை அடிப்படையாகக் கொண்டு நிரப்பப்படும்.

"நாகபுரி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்" என்றும் அந்த விளம்பரம் கூறுகிறது. விண்ணப்பப் படிவக் கட்டணமாக ரூ. 20 கல்லூரியால் வசூலிக்கப்படுகிறது.

மாநகராட்சியின் ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரசுக் கட்சி, மேற்கண்டவாறு நன்கொடை வசூலிக்க வேண்டும்' எனக் கூறும் தீர்மானம் ஒன்றை மாநகராட்சிக் கூட்டத்தில் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

நன்கொடை வசூலிக்கும் யோசனைக்கு மாணவர் சங்கங்களும், சில இந்திரா காங்கிரசுத் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

"இது சோஷலிசத்துக்கு விரோதமான செய்கை" என்று டி. ஜி. தேஷ்முக் (இந்திரா காங்கிரசு) கூறினார்.

அமைச்சரை அச்சுறுத்தும் நக்சல்பாரிகள்

தொலைபேசியில் கூப்பிட்டு மிரட்டுவதாகத் தகவல்

கல்கத்தா, ஜூலை 12—

கடந்த பல ஆண்டுகளாகத் தேடப்பட்டுவந்த நக்சல்பாரித் தலைவர் சாரு மசும்தார் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நக்சல்பாரி இயக்கத்திற்குக் காரணமானவர்கள் பலரும் சிறையில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

சாரு மசும்தார் கைது செய்யப்பட்டதன் தொடர்பாக மேற்கு வங்க உள்துறை அமைச்சர் சுப்ரதா முகர்ஜியைக் கொன்றுவிடப் போவதாகத் தொலைபேசி மூலம் நக்சல்பாரிகள் அச்சுறுத்தி வருகின்றனர்.

"நாங்கள் இன்னும் உயிருடன்தான் இருக்கிறோம்; உன்னைத் தீர்த்துக் கட்டுவோம்" என்று அந்த அநாமதேயக் குரல்கள் கூறினவாம்.

சாரு மசும்தாரின் நெருங்கிய கூட்டாளிகள் இருவரைப் போலீசார் தேடிவருவதாக அமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்திரா காங்கிரசு ஆட்சியில் 25 இலட்சம் பேர் பட்டினி

நாள்தோறும் பலர் செத்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் தகவல்

கல்கத்தா, ஜூலை 18—

இந்திரா காங்கிரசு ஆட்சியிலுள்ள மேற்கு வங்காளத்தின் பல பகுதிகளில் பட்டினிச் சாவுகள் ஏற்பட்டுள்ள சோகச் செய்தி வெளியாகியிருக்கிறது.

"மேற்கு வங்கத்தில் மேற்கு தினஜ்பூர் மாவட்டத்தில் ராய்கஞ்ச் சப்--டிவிஷனிலும், மால்டா மாவட்டத்தில் பல இடங்களிலும் கடந்த சில வாரங்களில் ஏராளமான பேர் பட்டினியால் மாண்டனர்" என்று பொது நிறுவன அமைச்சர் ஜெயினுல் அபெதின் தெரிவித்திருக்கிறார்.

மேற்கண்ட இடங்களில் ஏராளமான மக்கள் பட்டினியால் வாடுவதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

"ராய்கஞ்ச் சப்--டிவிஷனிலும், மால்டா மாவட்டத்திலும் கடுமையான வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளது; கடந்த 8 மாதங்களாக மழை இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"மேற்கூறிய பகுதிகளில் 25 இலட்சம் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்; விவசாய வேலைகள் எதுவும் நடக்கவில்லை; இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர்" என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பூட்டோ--முஜீப் சந்திப்பு நடைபெறும்?

லாஸ்கோ, ஜூலை 18—

"பாகிஸ்தான் அதிபர் பூட்டோ--வங்கத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமான் சந்திப்புக்கான உயர்மட்டப் பேச்சுக்கள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன" என்று நைஜீரியாவிலுள்ள பாகிஸ்தான் தூதர் கூறியிருக்கிறார்.

பஞ்சாபிலும் மேற்கு வங்க நிலை

3 மாதத்தில் 70 அரசியல் கொலைகள்

சண்டிகார், ஜூலை 18—

"பஞ்சாபில் கடந்த மூன்று ஆண்டுகளில் 5 போலீசுக்காரர்கள் உட்பட 70 பேர்களை நக்சல்பாரிகள் கொலை செய்தனர்; அதே 3 ஆண்டுக் காலத்தில் போலீசாருடன் நடந்த மோதல்களில் 31 நக்சல்பாரிகள் உயிரிழந்தனர்; தற்போது இந்த மாநிலத்தில் நக்சல்பாரி இயக்கம் ஒடுக்கப்பட்டுவிட்டது"

என்று போலீசுத் துறைச் செயலாளர் கே. எஸ். அலுவாலியா தெரிவித்தார்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி -- நிர்ணயம் செய்யக் குழு

தூதுக்குழுவிடம் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 17—

"விவசாயத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான்; ஆனால், மாநிலத்தில் அந்தக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

"இவையெல்லாம் ஆராய்ந்திட, முன்பு தஞ்சை மாவட்டத்தில் நியமித்த கணபதியா பிள்ளை குழுவைப்போல ஒரு குழுவை நியமிக்க வேண்டியிருக்கும்; அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தம்மைச் சந்தித்த தூதுக்குழு ஒன்றிடம் உறுதியளித்தார்; இத்தகவலை செய்தியாளர்களிடம் முதலமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பிலும் -- இடது கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலும் ஆர். உமாநாத் -- என். சங்கரய்யா -- ஆர். ராமராஜ் ஆகியோர் கோட்டையில் முதலமைச்சரைச் சந்தித்து மனு ஒன்று கொடுத்தனர்; அம்மனுவில், 'மாநிலம் முழுவதற்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிப்பதற்காகக் குழு ஒன்று அமைக்க வேண்டும்' எனக் கோரியிருந்தனர்.

குழுவினரின் கோரிக்கைகளை முதலமைச்சர் அனுதாபத்துடன் கேட்டறிந்தார்; குழுவினரின் மற்ற கோரிக்கைகளை பரிசீலனை செய்வதாக உறுதி கூறினர்.

"சென்ற ஆண்டு ஜூலை 20-ந் தேதியன்று வருவாய் வாரியத்திலிருந்து அனுப்பப்பட்ட தாக்கீதில், விவசாயக் கடன் பாக்கிக்காக அறுவடைக்குத் தயாராக உள்ள பயிர் நிலங்களில் உள்ள பம்பு செட்டுகளை ஜப்தி செய்யக்கூடாது என்று மாவட்டக் கலெக்டர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; அதைத் தொடர்ந்து செயல்படுத்த எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் யோசனை சொல்லப்பட்டுள்ளது."

விவசாயிகளுக்கு கடன் நிவாரணம்

கலெக்டர்களுக்குத் தாக்கீது

விவசாயிகள் கடன் நிவாரணக் கோரிக்கை குறித்து முதலமைச்சர் கூறியதாவது:—

"விவசாயக் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் கூடாது என்று கடந்த மார்ச் 30-ந் தேதியே தர்மபுரி மாவட்ட கலெக்டருக்குத் தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

வறட்சிப் பகுதிகளில் விவசாயக் கடன் வசூலிப்பதில் அதி தீவிரமோ -- கெடுபிடியோ கூடாது என்று ஏப்ரல் 19-ஆம் தேதி கோவை மாவட்டக் கலெக்டருக்கு எழுதப்பட்டது; ஜூன் மாதம் 30-ந் தேதி நடைபெற்ற மாவட்டக் கலெக்டர்கள் மாநாட்டில் இது சம்பந்தமாக எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

முகவை மாவட்டத்தில் கண் சிகிச்சை முகாம்கள்

ஆறு இடங்களில் நடத்த முடிவு

மதுரை, ஜூலை 18—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் செப்டம்பரிலிருந்து 6 கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும்; இராசபாளையம், சிவகாசி, அருப்புக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், காரைக்குடி ஆகிய இடங்களில் இம்முகாம்கள் நடத்தப்படும்; 6,000 பேருக்குக் கண் சிகிச்சையளிக்கப்படும்"

என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கே. சந்திரசேகரன் இங்கு நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இதற்கு மொத்தம் ரூ 5 இலட்சம் செலவாகும். இத்தொகை ஊராட்சி ஒன்றியங்கள் -- பொது நல நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து நன்கொடையாக வசூலிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 4 திறந்தவெளி அரங்குகளைக் கட்டவும் அரசு எண்ணியிருக்கிறது."

பள்ளி -- கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு

அடுத்த ஆண்டு முதல் நடத்தப்படும்

எஸ்.எஸ்.எல்.சி.-க்கு இருவித தேர்வு நடத்துவது பற்றி நாவலர் விளக்கம்

திருச்சி, ஜூலை 18—

"அடுத்த ஆண்டுமுதல் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேருவதற்கு நுழைவுத் தேர்வுகளை நடத்தத் தமிழ்நாடு அரசு எண்ணியிருக்கிறது"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கல்லூரிகளில் பல்வேறு வகுப்புகளுக்கு 'செமஸ்டர்' முறைப்படி தேர்வுகள் நடத்தவும் அரசு திட்டமிட்டிருக்கிறது.

தற்போது கல்லூரிகளில் தராதரம் பார்க்காமல் அனைவரையும் சேர்த்துக்கொள்ளும் முறையை மாற்ற வேண்டும்; எந்த நாட்டிலும் அனைவருக்குமே உயர் கல்வி அளிக்கப்படுவதில்லை."

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இருவிதமான கேள்வித் தாள்களை ஏற்படுத்தலாம் என்று அண்மையில் தாம் தெரிவித்த யோசனை பற்றி நாவலர் குறிப்பிட்டதாவது:—

"உயர் படிப்புப் படிக்க விரும்புபவர்களுக்காக விரிவான அடிப்படையில் கேள்வித் தாள்களை அமைக்கலாம் -- மற்றவர்களுக்கு எளிதான கேள்வித் தாள்களை அமைக்கலாம் என்று நான் கூறிய யோசனையைக் கல்வித் துறைக்கான பணிக் குழுவினர் பரிசீலனை செய்து வருகின்றனர்."

கடலூர் -- பெங்களூர் இரயிலில் தூங்கும் வசதிப் பெட்டிகள்

சென்னை, ஜூலை 15—

திருப்பாப்புலியூர் -- பெங்களூர் பாசஞ்சர் இரயில், ஜூலை 17-ம் நாள் முதல் சேலத்திலிருந்து பெங்களூர் வரையில், மூன்றாவது வகுப்பு தூங்கும் வசதி பெட்டியுடன் ஓடும்.

இதேபோல், 18-ம் நாள்முதல் பெங்களூரிலிருந்து சேலம் வரையில் இந்த இரயிலில் மூன்றாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டி இணைக்கப்படும்.

அமெரிக்காவின் மனித விரோதச் செயல்

ஹனாய், ஜூலை 18—

நச்சுத் தோய்ந்த இரசாயனங்களையும், நச்சுக் குண்டுகளையும் வடவியட்நாமில் பயன்படுத்துகின்றனர்.

இதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பல்வேறு பிணிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்"

என்று வியட்நாம் அரசு புகார் செய்திருக்கிறது.

கிராமங்களுக்குப் புதிய சாலைகள்

தென்னார்காடு மாவட்டக் கலெக்டர் தகவல்

திருப்பாபுலியூர், ஜூலை 18—

"தென்னார்காடு மாவட்டத்தில் 1,500-க்கும் கூடுதலாக மக்கட்தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளை அமைக்க அரசு ரூ. 52.61 இலட்சம் அனுமதித்துள்ளது; இதைத் தவிர, ஒரு சாலை அமைக்கவும் 3 சாலைகளை செப்பனிடவும் அரசு ரூ. 6.10 இலட்சம் அனுமதித்திருக்கிறது"

என்று தெ. தெ. ஆ. மாவட்டக் கலெக்டர் ஆர். சண்முகசிகாமணி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"லெவி முறை நீக்கப்பட்டதையடுத்து மாவட்டத்தில் சோதனைச் சாவடிகள் எடுக்கப்பட்டுவிட்டன" என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தில் சட்டம் -- ஒழுங்கு படும்பாடு

கல்கத்தா, ஜூலை 18—

"மார்ச் 20-ந் தேதிக்கும் -- ஜூன் 20-ந் தேதிக்குமிடையில் மேற்கு வங்கத்தில் 234 பேருக்குமேல் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதில் 26 -- அரசியல் கொலைகள்; அதிகபட்ச கொலைகள் (அதாவது 47) இருபத்துநான்கு பர்கானா மாவட்டத்தில் நடந்திருக்கிறது.

மேற்கு வங்கத்தில் கடந்த 6 மாத காலத்தில் உள்நாட்டுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 4,325 சமூக விரோதிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்."

இத்தகவல்களை, சட்டமன்றத்தில், போலீசுத் துறை துணையமைச்சர் தெரிவித்தார்.

கல்விக்குத் தனி வாரியமா?

பத்திரிகைச் செய்திக்கு நாவலர் மறுப்பு

சென்னை, ஜூலை 18—

"கல்வி வளர்ச்சிக்குத் தனி வாரியம் அமைக்கப்பட இருப்பதாக நான் சொன்னதாகச் செய்தி வெளி வந்திருப்பது முற்றிலும் தவறானதாகும்"

என்று, கல்வியமைச்ச நாவலர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், விளக்கி கூறியதாவது:—

"கல்வித் துறைக்குத் தனி வாரியம் அமைப்பதற்கில்லையென்று பலமுறை சட்ட மன்றத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்குக் கடன் வழங்கத் தனி நிறுவனம் அல்லது வாரியம் ஒன்றினை அமைப்பதற்கு அரசு ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத்தான் குறிப்பிட்டேன்.

அத்தகைய வாரியம் அமைப்பதன் நோக்கம் எல். ஐ. சி. போன்ற நிதி நிறுவனங்களிடத்தில் நிதியினைப் பெற்றுப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதுதான்.

எல். ஐ. சி, போன்ற நிதி நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு நேரடியாகக் கடன்தராது; எனவேதான், இந்தக் கடன் வழங்குவதற்கான ஏற்பாடாக ஒரு தனி நிறுவனம் அல்லது வாரியம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது."

தமிழக அரசின் சிக்கன நடவடிக்கை

அக்டோபர் வரை புதிய திட்டங்களுக்கு அனுமதியில்லை

திருச்சி, ஜூலை 18—

தமிழ்நாடு அரசு சில சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

"மத்திய அரசு முழுமையாக உதவி அளிக்கும் திட்டங்கள் நீங்கலாக 1972—73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறாத எந்தப் புதிய திட்டங்களுக்கும் இவ்வாண்டு அக்டோபர் வரையில் அனுமதி வழங்கப்பட மாட்டாது" என்று தமிழ் அரசு அறிவித்துள்ளது.

எனவே, இவ்வாண்டு அக்டோபர் வரையில் எந்தத் திட்டத்தையும் அனுப்பாதிருக்குமாறு துறைத் தலைவர்களுக்கு அரசு தெரிவித்துள்ளது.

'ரிசர்வ் பாங்கியில் ரொக்க இருப்பை மாநில அரசு குறைக்கக் கூடாது' என்று மத்திய அரசும் -- ரிசர்வ் பாங்கியும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளன; எனவே, அந்தக் கட்டுப்பாடுகளின்படி இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவுக்குக் கூடுதலாக மொத்தச் செலவு போகாதவாறு செலவினங்களை அரசு இப்போது முதற்கொண்டு ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது.

1972—73-ம் ஆண்டின் இரண்டாவது பகுதிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்படாத திட்டங்கள் அக்டோபர் மாதம் முதற்கொண்டே அனுமதிக்கப்படும் என்றும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டங்களும் அக்டோபர் முதற்கொண்டே செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் துறை தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

"ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறாத கட்டடத் திட்டங்களின் செலவில் 10 சதவிகிதம் வெட்டுச் செய்யப்படும்" என்றும் அரசு தெரிவித்துள்ளன.

இண்டர்மீடியட் வகுப்பு

மீண்டும் துவக்க சென்னை பல்கலைக் கழகம் ஆய்வு

கல்வி அமைச்சர் நாவலர் தகவல்

திருச்சி, ஜூலை 18—

"கல்லூரிகளில் இரண்டாண்டு இண்டர்மீடியட் படிப்பை மீண்டும் துவக்குவதற்கு பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து வருகிறது"

என்று கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், இங்கு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"இப்பிரச்சினை பற்றி முடிவுகள் எடுக்கப்பட்டபின், இரண்டாண்டுக் கல்லூரிக் கல்வியை இலவசமாக்க நிதி வசதிகளை அரசு தேட வேண்டும்"

என்று அவர் சொன்னார்; மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"பள்ளி -- கல்லூரிக் கல்வி அமைப்பு, படிப்புக் காலம் ஆகியவை குறித்துத் தனது அறிக்கையை அளிக்கத் தமிழ்நாடு திட்டக் குழுவினால் நியமிக்கப்பட்ட குழு மேலும் சிறிது காலக் கெடு கோரியிருக்கிறது.

ஐதராபாத் நிர்வாகப் பயிற்சிக் கல்லூரி நிபுணர் குழு கல்வி நிர்வாகத்தையும் -- அமைப்பையும் குறித்துத் தெரிவித்துள்ள சிபாரிசுகளையும் இக்குழு ஆராய்ந்து -- அவற்றை எந்த அளவுக்குச் செயல்படுத்தலாம் என்பதையும் தெரிவிக்கும்."

ஆளுங்கட்சியை எதிர்க்க நியாயமற்ற போராட்டங்கள்

அரசியல் கட்சிகளும் -- தலைவர்களும் தூண்டிவிடுகின்றனர்

மதுரை 'தமிழ்நாடு' இதழ் தரும் தகவல்

"தமிழ்நாட்டில் தங்களுக்குப் பிடிக்காத ஆளுங்கட்சியையும், தொழில் நிறுவனங்களையும் வன்முறைக்குள்ளாக்கி இடர்ப்படுத்தவே வன்முறைப் போராட்டங்களைச் சில அரசியல் கட்சிகளும் தலைவர்களும் தூண்டிவிடுகின்றனர்"

என்று, மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ்நாடு' வார இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டு, நியாயமற்ற போராட்டங்களுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது; அந்தத் தலையங்கம் வருமாறு:—

"கடந்த சில மாதங்களாக நாட்டில் எதற்கெடுத்தாலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சட்டம் -- ஒழுங்கு -- அமைதி ஆகியவற்றிற்குச் சிறிதும் மதிப்புத் தராமல் போராட்டத்தில் மக்களில் ஒரு பகுதியினர் ஈடுபடுவதைப் பார்க்கையில் வருத்தம் ஏற்படுகிறது.

பொதுவாக, ஆக்கிரமிப்பில் ஈடுபடும் நாட்டிற்கும் -- தாக்குதலுக்கு இலக்காகும் நாட்டிற்கும் இடையே போர் நடப்பதுண்டு; சில நேரங்களில், தீய அரசை வீழ்த்துவதற்காகக் குடிமக்கள் வன்முறைப் புரட்சியைக் கைக்கொள்ளுவார்கள்; ஆனால், மக்கள்தேர்ந்தெடுத்த அரசுக்கும் -- மக்கள் நடத்தும் நிறுவனங்களுக்கும் எதிராக அரசியல்வாதிகள் சிலரின் தூண்டுதலால் வன்முறைப் போராட்டங்கள் இப்போது அடிக்கடி நிகழ்கின்றன; இது சிறிதளவும் பொருத்தமாக இல்லை.

மேலும், அயலவர் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தக் காந்தியடிகள் முற்பட்ட போது, அமைதியான அறப் போரையே அவர் மேற்கொண்டார்; மற்றும், தனிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதை அவர் ஆதரிக்கவில்லை; அதிலும், தனிப்பட்ட அதிகாரிகளை ஒரு காரணமும் இன்றி முற்றுகை செய்தல் போன்ற வன்முறையைக் காந்தி அடிகள் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்.

ஆனால், இன்றைய வன்முறைப் போராட்டங்கள், அறநெறி அடிப்படையில் அமையவில்லை; மேலும் பல போராட்டங்களுக்கு எத்தகைய நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை; தமக்குப் பிடிக்காத ஆளுங் கட்சியையும் -- தொழில் நிறுவனங்களையும் வன்முறைக்குள்ளாக்கிஇடர்ப்படுத்தவே இத்தகைய போராட்டங்களைச் சில அரசியல் கட்சிகளும், தலைவர்களும் தூண்டிவிடுகின்றனர்.

ஆயின், இவ்வன்முறைப் போராட்டங்களால் நாட்டின் உற்பத்தித் திறனும் முன்னேற்றமும் வெகுவாகப் பாதிக்கப்படுவதை இவர்கள் சிறிதளவும் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை

இந்தியாவின் மக்கள் தொகைச் சிக்கலைத் தாங்கிப் பொருளாதாரத் துறையில் நாம் வெற்றி காணவேண்டுமாயின், கட்டுப்பாடும் கடின உழைப்பும் தேவை.

ஆதலின், வீண் போராட்டங்களைக் கைவிட்டு மக்கள் ஆக்க முயற்சியில் முனைந்து ஈடுபட வேண்டுமென வற்புறுத்துகிறோம்."

கிராமச் சாலைகள் அமைப்பு

ரூ. 3 கோடியில் தமிழக அரசின் திட்டம்

சென்னை, ஜூலை 18—

ரூ. 3-கோடி பெறுமான கிராமச் சாலை வேலைத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு அனுமதித்திருக்கிறது.

முதல் கட்டத்தில் 250 கி.மீ. தொலைவுக்குப் புதிய சாலைகள் போடப்படும்; 1500 கி.மீ. தொலைவுக்குத் தற்போதுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

"மாநில நெடுஞ்சாலைத் திட்டத்தில் கணிசமான முன்னேற்றம் அடைந்ததையொட்டி கிராமச் சாலை அமைக்கும் பணிகளில் முக்கியத்துவம் காட்டித் திட்டங்களை அரசு மேற்கொண்டிருக்கிறது"

என்று நெடுஞ்சாலை -- கிராமப் பணித் தலைமைப் பொறியர் பொறுப்பை அண்மையில் ஏற்ற ஆர். தில்லைநாயகம் தெரிவித்தார்.

ரூ. 1.50 கோடி மத்திய அரசு உதவியுடன், கிராமச் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

முன்னாள் மன்னரின் மாளிகை -- நிலங்கள்

மைசூர் அரசு வாங்கும்

பெங்களூர், ஜூலை 17—

மைசூர் சமஸ்தானத்தின் முன்னாள் மன்னர் ஜெயசாமராஜ வாடியாருக்குச் சொந்தமான மாளிகை பெங்களூரில் உள்ளது; இந்த மாளிகையையும் மற்றும் அவருக்குச் சொந்தமாக பெங்களூரில் உள்ள சுமார் 600 ஏக்கர் நிலத்தையும் மைசூர் அரசு வாங்கக்கூடும்.

அவ்வாறே ஜெயசாமராஜ வாடியாருக்குச் சொந்தமாக மைசூரில் உள்ள 800 ஏக்கர் நிலத்தையும், மாளிகையைத் தவிர இதர கட்டடங்களையும் மைசூர் அரசு வாங்கக்கூடும்; இவற்றுக்கான விலையை மத்திய அரசு நிர்ணயிக்கும்.

இத்தகவலை, மைசூர் முதல்வர் தேவராஜ் அர்ஸ், மைசூர் சட்டமன்ற புது காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பெங்களூரில் வாங்கப்படும் மாளிகையைச் சுற்றுலா இடமாக ஏற்படுத்த மைசூர் அரசு எண்ணியிருக்கிறது என்றும், அதைப் பார்ப்பதற்கு உல்லாசப் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவுகளின்படி, முன்னாள் மன்னரின் இந்தச் சொத்தை, அரசு கையகப்படுத்த முடியும்; ஆனால் ஜெயசாமராஜ வாடியார், மைசூர் மாநிலத்துக்கும் -- மக்களுக்கும் ஆற்றியுள்ள பணிகளைக் கருத்தில் கொண்டு, அவரிடமிருந்து வாங்கப்படும் சொத்துக்கு நியாயமான விலை அளிக்க அரசு விரும்புகிறது"

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் உதவி

உடனடி நிவாரணம் அளிக்க உத்தரவு

உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ரூ. 500 உதவி

சென்னை, ஜூலை 17—

சென்னை 109-வது வட்டம் தியாகராயநகர் சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக விடிழந்து பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

தீ விபத்தில் இறந்துபோன சிறுவனின் பெற்றோருக்கு -- முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 500 உதவிப் பணம் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கூறியதாவது:—

"தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்த்தேன்; மாவட்ட ஆட்சித் தலைவருடன் பேசி -- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மாற்று இடம் கொடுக்குமாறு கூறியிருக்கிறேன்.

"தீ விபத்து நடந்த இடம் ஏற்கனவே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இடமாகும்; ஆகவே, விரைவாக அந்த இடத்தில் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டப்படும் வரையில் வேறு இடத்தில் வசதிகள் செய்து தருமாறும் குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் -- கலெக்டர் ஆகியோரிடம் கூறியிருக்கிறேன்."

சிண்டிகேட்டுக்கு முழுக்கு

குன்னூர் சிண்டிகேட் நகராட்சி உறுப்பினர் திரு. ஜே. நஞ்சா கவுடர், சிண்டிகேட் நடவடிக்கை பிடிக்காததாலும் -- வேண்டுமென்றே விவசாயக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டுத் தமிழகத்தில் வன்முறைச் செயலுக்கு வழிவகுக்கும் முறையில் நடந்துள்ளதாலும், அந்தக் கட்சியைவிட்டு விலகி, மக்களுக்காகப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் கே. பி. முருகேசன் -- மாவட்டத் துணைச் செயலாளர் மு. வேலன் -- நகரச் செயலாளர் எச். தங்கம் ஆகியோரின் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து கையொப்பமிட்டார்.

அதேபோன்று, நகரமன்றச் சுயேச்சை உறுப்பினர் எம். மலர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்.

போரில் வீரச் செயல்

விருது பெற்ற வீரர்களுக்கு தமிழக அரசு உதவிப் பணம்

சென்னை, ஜூலை 18—

சென்ற டிசம்பரில் பாகிஸ்தானுக்கும் -- இந்தியாவுக்கும் இடையே நடந்த போரின்போது தீரச் செயல்களைப் புரிந்ததற்காக 'மகாவீர சக்கர' விருது பெற்ற லெப். கர்னல் சித்தூர் வேணுகோபாலுக்கு ரூ. 10,000 உதவிப் பணம் வழங்க தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

உதவிப் பணம் பெறும் இதர இராணுவ வீரர்கள் வருமாறு:—

வீரச் சக்கர விருது பெற்ற மேஜர் அனந்தநாராயண் கிருஷ்ணசாமி — ரூ. 5,000.

தீரச் செயல்களுக்காகப் பாராட்டுதல்களைப் பெற்ற காப்டன் கண்ணன், மேஜர் கொங்கவெங்கடரமணராவ், மேஜர் பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்குத் தலா ரூ 2 000.

மேலும் பலருக்கு வீர மானியம்

இந்தியா -- பாகிஸ்தான் போர்க்களத்தில் வீரச் செயல் புரிந்து -- வீர விருதுகள் பெற்ற தமிழ்நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கும் -- வீரர்களுக்கும் தமிழக அரசு வழங்கி வரும் வீர மானியம் மேலும் எண்மருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வீர மானியம் பெற்றோரின் பெயர் விவரம் வருமாறு:—

வீரச் சக்கர விருது பெற்ற கமாண்டர் இலட்சுமி நாராயண இராமதாஸ் (ரூ. 5,000).

லெப்டினன்ட் ஏ. தேவோஜி ராவ் (ரூ. 2,000).

லெப்டினன்ட் சி. ஆர். செயராமன் (ரூ 2,000).

கமாண்டர் ஆர். ஏ. ஜே. ஆண்டர்சன் (ரூ. 2,000).

நவசேனா பதக்கம் பெற்ற அப்துல் அமீது (ரூ. 3,000).

மகாவீர சக்கர விருது பெற்ற கமாண்டர் கே. பி. கோபால் (ரூ. 10,000).

நவசேனா பதக்கம் பெற்ற சர்ஜன் கமாண்டர் ஜி பி. கிறிஸ்டியன் (ரூ. 3,000)

வீரச் சக்கர விருது பெற்ற லெப்டினன்ட் கமாண்டர் எஸ் இராமசாகர் (ரூ. 5 000).

சாவி தேவையில்லாத மின்சாரப் பூட்டு

வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்று சாவியைத் தொலைத்துவிட்டு அவதிப்படுவோர் அநேகம்பேர்; இவர்களை மனத்தில் கொண்டு, பிரிட்டனில் ஒரு புதிய பூட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்குச் சாவியே தேவையில்லை.

சுமார் ஆறு அங்குல நீளம் இரண்டு அங்குல அகலத்தில் இருக்கும் இந்தப்பூட்டை கதவோடு பொருத்திக் கொள்ளலாம்; இதில் மேலிருந்து கீழாக ஒன்று முதல் 10 வரையில் எண்கள் உள்ள பித்தான்கள் உண்டு. ஒவ்வொரு பூட்டும் பூட்டிக்கொள்ளவும் -- பூட்டிய பிறகு திறந்துகொள்ளவும் ஓர் இரகசிய எண் உண்டு; பூட்டிக் கொண்டு வெளியே சென்ற பிறகு வீட்டுக்குத் திரும்பி அந்த இரகசிய எண்ணை அமுக்கினால் பூட்டு திறந்து கொள்கிறது.

பாதுகாப்பைக் கருதி இரகசிய எண்ணை வீட்டுக்காரர்கள் மட்டும் வைத்துக் கொள்ளவேண்டும் -- வெளியில் சொல்லக்கூடாது.

இதில் வேறு சில உத்தரவாதங்களும் உண்டு; சரியான இரகசிய எண் என்ன என்று தெரியாமல் யாரும் இதனைத் திறக்கமுடியாது; வெவ்வேறு எண்ணை அமுக்கி முயற்சி செய்யலாம் என்பது இதனிடம் பலிக்காது; தவறான எண் ஒருமுறை அமுக்கப்பட்டாலும் உடனே எச்சரிக்கை மணி ஒன்று ஒலிக்கத் தொடங்கும்; வீட்டின் உள்ளே இருக்கும் விசையை இயக்கும்வரை இந்த மணி ஒலித்துக் கொண்டே இருக்கும்.

அதுமட்டுமல்ல -- இந்தப் பூட்டை உடைக்கவோ அல்லது இதன் இணைப்பைத் துண்டிக்கவோ முயற்சி செய்தாலும் இதேபோல் எச்சரிக்கை மணி ஒலிக்கும்.

இந்தப் பூட்டிற்குள்ளேயே ஒரு பாட்டரியும் உண்டு; சாதாரணமாக மின்சார இணைப்புடன் இருக்கும் இந்தப் பூட்டு, மின் சப்ளை நின்றுவிட்டால் தானாகவே பாட்டரியால் இயங்க ஆரம்பிக்கிறது.

நாகர்கோவில் அருகில் உடல் ஊனமுற்றோருக்குத் தொழிற்பயிற்சி நிலையம்

நாகர்கோவில், ஜூலை 18—

நாகர்கோவிலிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள 'ஆரம்போலி' என்னும் இடத்தில், உடல் ஊனமுற்றோருக்கான தொழிற்பயிற்சி நிலையத்தின் புதிய அலுவலகமும் -- பயிற்சிக்கூடமும் திறக்கப்பட்டிருக்கிறது.

குமரி மாவட்டக் கலெக்டர் ஏ. பி. முத்துசாமி தலைமையில் திருவனந்தபுரம் ஆர்ச் பிஷப் இதைத் திறந்துவைத்தார்.

ஆளும்காங்கிரசின் அரசியல் பகைமை

கழக அரசைக் கவிழ்க்கும் திட்டம் வெட்டவெளிச்சமாகிறது

தமிழக அரசின் நடவடிக்கைகளில் மட்டும் தனி அக்கறை காட்டக் காரணம் என்ன?

எந்தத் திட்டத்துடன் மூவர் குழுவை நியமித்தனர்?

'......ஒன்று -- மத்திய அரசு அதிகமாக மின்கட்டணத்திற்கு வரி விதிக்கச் சொல்லும் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும்; அல்லது போராட்டத்தில் ஆளும் காங்கிரசுக் கட்சி ஈடுபடாமல் தடுக்க வேண்டும்; இந்த இரண்டுமற்ற நிலை, ஆளும் காங்கிரசுக் கட்சி கொண்டுள்ள அரசியல் பகைமையை வெட்ட வெளிச்சமாக்குகிறது!

இந்தியத் துணைக்கண்டத்திலேயே காங்கிரசு அல்லாத கட்சி ஆளுகின்ற ஒரே மாநிலம் தமிழகமே! பிற மாநிலங்களில், மாற்றுக் கட்சிகளின் அரசை இந்திரா காந்தி சமயம் பார்த்துக் கவிழ்த்திருக்கிறார்!

சென்ற மக்களவைத் தேர்தல் காலத்தில், தமிழக அரசு சட்டமன்றத்தைக் கலைத்து -- புதிய தேர்தலில் முன்னிலும் அதிகப் பலம் பெற்று அரசு அமைத்துள்ளது; இன்னும் 5 ஆண்டுக்காலம் அவர்கள் ஆட்சி நடத்துவார்கள் என்பது மத்திய அரசும் -- தமிழக மக்களும் அறிந்த ஒன்று!

இனி இவர்களைக் கீழே இறக்க என்ன செய்யலாம் என்பதன் அடிப்படைதான் இந்தப் போராட்டம் என்பது தெளிவாகிறது; இல்லையெனில், நேற்றுவரை கீரியும் -- பாம்புமாக இருந்த சிண்டிகேட்டும் -- ஆளும் காங்கிரசும் ஒன்றாகச் சேருமா? ஜனசங்கத்தின் பெயரைச் சொல்வதையே பழிப்பாகக் கருதிய ஆளும் காங்கிரசு அவர்களோடு சேர்ந்து போராட்டத்தில் இறங்குமா?

இன்னொரு மாநிலத்தில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றபோது, இந்திரா காந்திக்கு இவ்வளவு கவலை ஏற்படவில்லை; அலிகார் பல்கலைக் கழகப் பிரச்சினையையொட்டி உ. பி.-யில் நடந்த கிளர்ச்சியின் விளைவாக நடந்த துப்பாக்கிச்சூட்டில் 25 பேர் உயிரிழந்தனர்; அதற்கு எந்த விசாரணைக் குழுவும் அமைக்கப்படவில்லை!

தமிழகத்தில் மாட்டு வண்டிகளைக் கொண்டுவந்து மறித்து -- மக்களது அன்றாட வாழ்க்கையை நிலைகுலையச் செய்த முயற்சிகளைக் கட்டுப்படுத்த -- அமைதி ஏற்படுத்தத் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்கு மட்டும் விசாரணை செய்வதில் தனி அக்கறை ஏற்படக் காரணம் என்ன?

அவர்கள் இதற்கென்று ஒரு மூவர் குழுவைத் தமிழகத்திற்காக நியமித்திருக்கிறார்கள்; உ. பி. மாநிலத்திற்கு மட்டும் ஏன் விசாரணைக் குழுவை அனுப்பவில்லை?

1957-ல், மார்க்சிஸ்டுகள் ஆட்சியில் கேரள மாநிலத்தில், ஒரு 'விடுதலைப் போராட்டம்' நடைபெற்றது; அன்று தேபர் தலைமையிலான ஒரு விசாரணைக் குழு கேரளத்திற்கு வந்தது; முடிவு என்னவென்று தெரிந்தது; கம்யூனிஸ்டு அரசை மத்திய அரசு கவிழ்த்தது! 'அதே திட்டத்தோடுதான் இந்தக் குழுவும் அனுப்பப்படுகிறதோ' என நியாயமான ஐயப்பாடு தோன்றுவது இயல்பே!

'காங்கிரசுக்குப் பங்கில்லாத அமைச்சரவை எதுவும் கூடாது' எனும் இந்திரா காந்தியின் கொள்கை சரியானதன்று!

கூட்டாட்சி உரிமை தடை செய்யப்படாத வரையில், மக்களின் செல்வாக்குப் பெற்ற எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வருவது இயற்கையே!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வரும் அமைச்சரவைகளைக் கவிழ்க்கும் மத்திய அரசின் போக்கு இனியாகிலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; இன்னும் சற்றுப் பரந்த கண்ணோட்டத்துடன் தலைமையமைச்சர் இதுபோன்ற பிரச்சினைகளை அணுக வேண்டும்!"

—'தனி நிறம்' என்ற மலையாள ஏட்டின் கட்டுரையில்

பணத்திற்குப் பதிலாக நிலம்

மாணவர்களுக்கு வழங்கத் திட்டம்

மாராட்டிர அமைச்சர் அறிவிப்பு

பம்பாய், ஜூலை 17—

வேளாண்மைக் கல்வி மாணவர்கட்குப் படிப்புக்கு உதவும் பணத்திற்குப் பதில், நிலம் வழங்கும் திட்டம் ஒன்றை மாராட்டிர வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். பி. சவான் அறிவித்தார்.

தமது துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதங்கட்குப் பதிலளிக்கையில் அவர், 'ஒவ்வொரு மாணவருக்கும் பணத்திற்குப் பதில் 16 ஹெக்டார் நிலம் விவசாயத்திற்காக வழங்கப்படும்' என்று தெரிவித்தார்; 'அனுபவபூர்வமான உடலுழைப்புப் பயிற்சிக்கு மாணவர்களுக்கு இது உதவும்' என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டுடைமை பாங்கிகளால் பலன் என்ன கிடைத்தது?

"வேளாண்மைத் துறை வளர்ச்சிப் பணிக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகள் உதவிகரமாக இல்லை" என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

"இந்த ஆண்டில், மிகு விளைவுப் பயிர் சாகுபடி -- குறிப்பாக 'எச், 4' பருத்திச் சாகுபடித் திட்டம் பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது; நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகள் ஒத்துழைக்காததன் காரணமாக அத்திட்டம் தோல்வியடைந்தது" என்று சவான் கூறினர்.

"தக்காவிக் கடனாக மாநில அரசு ரூ. 4 கோடி வரை வழங்க வேண்டியிருந்தது; ஆனால் நாட்டுடைமை பாங்கிகள் எதுவும் உதவ முன்வரவில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

21 இடங்களில் மாணவர் விடுதிகள்

உடனடியாகத் துவக்க அரசு அனுமதி

திருச்சி, ஜூலை 18—

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உடனடியாக மாணவருக்காக 21 அரசினர் விடுதிகள் துவக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றில் ஏழு கல்லூரி மாணவர்கட்கும், எஞ்சியவை உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கும் -- மாணவியருக்கும் ஆகும்.

கல்லூரி மாணவர்களுக்காகத் துவக்கப்படுபவை:—

தாம்பரம், விழுப்புரம், கரூர், மதுரை, சிவகங்கை, வேலூர், திருவாரூர் ஆகிய இடங்களில் அமையும்.

ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள்:—

செங்கற்பட்டு மாவட்டத்தில் செவ்வாய்ப்பேட்டை, நாடூர்.

திருச்சி மாவட்டத்தில் அன்னவாசல், தாத்தையங்கார்பேட்டை.

சேலம் மாவட்டத்தில் நாமகிரிப்பேட்டை.

தருமபுரி மாவட்டத்தில் மல்லபுரம்.

கோவை மாவட்டத்தில் கவுந்தம்பாடி.

இராமநாதபுர மாவட்டத்தில் திருவேங்கம்பேட்டை.

வடார்க்காடு மாவட்டத்தில் கீழ்கொடுங்கலூர்.

ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உயர்நிலைப் பள்ளி மாணவியருக்கான விடுதிகள்:—

சேலம் மாவட்டத்தில் ஓமலூர்.

நெல்லை மாவட்டத்தில் களக்காடு.

கோவை மாவட்டத்தில் அந்தியூர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் தர்மநல்லூர்.

ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவியர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இருபதாண்டுக் காலம் காமராசர் செய்தது என்ன?

கையாலாகாத்தனத்தை அவரே வெளிப்படுத்தும் பரிதாபம்

கலைஞரின் நல்லெண்ணத்தையும் கல்யாணசுந்தரத்தின் கெடு நினைப்பையும் புரிந்து கொள்வீர்!

அமைச்சர் என். வி. நடராசன் முழக்கம்

அந்தியூர், ஜூலை 18—

அந்தியூரில் ஜூலை 15-ம் நாள் நடந்த வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், இருபத்தைந்தாண்டுக் காலமாக வறுமையை ஒழிக்க முடியவில்லை என்று காமராசர் இப்போது வெளிப்படுத்தும் கையாலாகாத்தனத்தைச் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் கிளர்ச்சியின்போது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காட்டிய நல்லெண்ணத்தையும், கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரம் வெளிப்படுத்திய கெடுமதியையும் எடுத்துக்காட்டினார்; அவர் பேசியதாவது :—

"தி. மு. கழகத்தை ஆட்சியில் அமர்த்தியவர்கள் விவசாயிகள்தான்; ஆகவே, விவசாயிகளுக்கு எதிராக இந்த அரசு என்றும் நடந்ததில்லை!

கேரளத்தில் 9 காசாக இருந்த மின் கட்டணம் 12 காசாக உயர்ந்தது! ஆந்திரத்தில் 16 காசு — உ. பி.-யில் 45 காசு — அந்த இடங்களில் எல்லாம் போராட முன்வராத வலது கம்யூனிஸ்டுகள் — இந்திரா காங்கிரசார் — சிண்டிகேட் காங்கிரசார், தமிழ்நாட்டில் மட்டும் கிளர்ச்சி செய்வதேன்?

இது தவிர, விவசாயக் கடன் — விவசாய வருமான வரி ஆகியவைகளை ரத்து செய்யும்படியும் கிளர்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள்.

மன்றாடியார் ரூ. 42,000 வரி கட்ட வேண்டும்; சேலம் சாமிநாதன் ரூ. 1 இலட்சம் வரி கட்டவேண்டும்; இவையெல்லாம் பொதுமக்களுக்குரிய பணம் — ஏழைகளின் பணம்; இவைகளை ரத்து செய்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்று ஆலோசனை செய்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் அண்மையில் நகராட்சிக்கு 12 இடங்களுக்குத் தேர்தல் நடந்தது; இதில் 7 இடங்கள் தி. மு. கழகத்திற்கும் — 2 இடங்கள் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் கிடைத்தன; சிண்டிகேட் காங்கிரசு 3 இடங்களைப் பெற்றது; ஆனால் இந்திரா காங்கிரசார் டெபாசிட்டையும் இழந்தார்கள்.

இதிலிருந்து, மக்கள் ஆதரவு தி. மு. கழகத்தின் பக்கம்தான் இருக்கிறது என்பது வெளியாகிறது.

"இக்கிளர்ச்சியைத் துப்பாக்கியால் அடக்க தி. மு. கழக அரசு முற்படாது" என்று முதலமைச்சர் கூறினார்; ஆனால் கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரமோ, 'துப்பாக்கி ஏந்தும்படி செய்கிறேன் பார்' என்றார்!

இதிலிருந்து, கலைஞரின் நல்லெண்ணத்தையும் — கல்யாணசுந்தரத்தின் கெடு நினைப்பையும் புரிந்துகொள்ளலாம்!

'25 ஆண்டுகளாகியும் ஏழைகள் வாழ்வு உயரவில்லை' என்று காமராசர் தனது பிறந்த நாளில் கூறியிருக்கிறார்.

இவர்கள் 20 ஆண்டுகளாக நாட்டை ஆண்டுவந்தார்கள் — ஏழைகளுக்கு என்ன செய்தார்கள்? ஏன் வறுமை போகவில்லை? 'ஒன்றும் செய்யவில்லை' என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார் என்றுதான் அர்த்தம்.

வருகின்ற செப்டம்பர் மாதம் 15ந் தேதி அறிஞர் அண்ணா பிறந்த நாளன்று 1,15 000 ஏழைகளுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படும்."

தி.மு.க. தலைமைச் செயற்குழு— பொதுக்குழுக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

1972 ஜூலை 29, 30 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி. மு. கழகத் தலைமைச் செயற்குழு — பொதுக்குழுக் கூட்டங்கள், ஆகஸ்ட் 25, 26, 27 ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

'அறிவகம்' சென்னை—13
18—7—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

நாடாளுமன்றத் தி.மு.கழக உறுப்பினர்கள் கூட்டம்

நாடாளுமன்ற (மக்களவை — மேலவை) தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 28-7-72 வெள்ளிக்கிழமை காலை 10-மணியளவில், சென்னை — அண்ணா சாலையில் உள்ள தி. மு. கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை-13
18—7—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க. (அமைப்பு)

செங்கம் வேளாண்மைப் பண்ணை

2 ஆண்டில் 8,000 ஏக்கர் வளப்படுத்தத் திட்டம்

சிறு நிலக்காரர்கள் சேர்ந்து பயன்பெறவும் வாய்ப்பு

சென்னை, ஜூலை 18 —

'வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம் மத்தியப் பண்ணையில் 10 000 ஏக்கரில் 8 000 ஏக்கர் நிலம் இன்னும் இரு ஆண்டுகளில் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்படும்; எஞ்சிய 2 000 ஏக்கரும் பாறை நிலமாகும்; இவற்றைச் சாகுபடிக்கு ஏற்றதாக வளப்படுத்த முடியாது"

என்று மத்திய அரசு விவசாயப் பண்ணைக் கழகத் தலைவர் எச். ஆர். கிருஷ்ணா இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"செங்கம் பண்ணை சென்ற ஆண்டு துவக்கப்பட்டது என்றாலும் இவ்வாண்டு சனவரித் திங்கள் முதற்கொண்டே அது செயல்படத் துவங்கியது; கடந்த 6 மாத காலத்தில் அது பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது; சுமார் 1,500 ஏக்கர் நிலம் சாகுபடிக்குத் தகுதியுள்ளதாக வளப்படுத்தப்பட்டுள்ளது; அடுத்த சூன் மாதத்துக்குள் அப்பகுதியில் ரூ. 4 இலட்சம் பெறுமானமுள்ள உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

செங்கம் பண்ணையில் பிரும்மாண்டமான 200 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன; இக்கிணறுகளில் உள்ள நீரை எப்படிப் பாசனத்துக்கும் பயன்படுத்துவது என்பது பற்றி அண்மையில் உள்ள விவசாயிகட்குச் செயல் முறை விளக்கம் அளிக்கப்படுவதுடன்கூட, மீன் வளர்ப்பதற்காகக் குளங்களுக்கும் இக்கிணறுகளில் உள்ள நீர் பயன்படுத்தப்படும்.

செங்கத்தில் உள்ள மத்திய பண்ணையிலிருந்து 10 மைல் தொலைவுக்குள் உள்ள சிறு நிலச் சுவான்தார்கள் இத்திட்டத்தை மேற்கொள்ளலாம்; குறிப்பாகச் செங்கம், சிறு பண்ணைகள் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பகுதியின்கீழ் வருகிறது."

மாணவர்கள் நடத்தும் முதல் கல்லூரி

கேரளத்தில் இயங்குமாம்

கொச்சி, ஜூலை 18—

"கேரளத்தில் மாணவர்களால் தொடங்கப்படும் முதல் கல்லூரி ஆகஸ்டு முதல் வாரத்தில் திருவனந்தபுரத்தில் இயங்கும்; 1,500 மாணவர்கள் அதில் கல்வி கற்பார்கள்"

என்று கேரளப் பல்கலைக் கழக சங்கத் தலைவர் இராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

கேரளப் பல்கலைக்கழகச் சங்கத்தின் அலுவலகமான பல்கலைக் கழக மாணவர் நிலையம் இந்தக் கல்லூரியாக மாற்றப்படுகிறது.

மாநிலத்தில் 11 மாவட்டங்கள் அனைத்திலும் இத்தகைய கல்லூரிகளை நடத்த வசதியிருக்கும் என்று அரசிடம் சங்கம் தெரிவிக்குமாம்.

நெல்லிக்குப்பத்தில் சாலை அமைப்பு

திருச்சி, ஜூலை 18—

தென்னாற்காடு மாவட்டம் — நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலைகளை அமைக்கக் கரும்பு 'செஸ்' நிதியிலிருந்து தமிழக அரசு ரூ 6,10,800 அனுமதித்துள்ளது.

பிரதாப் சந்திரன் கொலை வழக்கு

மற்றொரு எதிரி கைது

சென்னை, ஜூலை 18—

தி. மு. க. தொழிற்சங்கத் தலைவர் பிரதாப் சந்திரன் கொலை வழக்கு சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த டில்லிபாய் என்கின்ற டில்லிபாபுவை போலீசார் நேற்று கைது செய்தனர்.

பூவிருந்தவல்லியில் ஒரு சாவடியில எதிரி மறைந்திருந்ததாகவும், ஒரு மோட்டார் சைக்கிள் வாங்குவது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தி வந்ததாகவும் போலீசுக் கமிஷனர் பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

தகவல் அறிந்தவுடன் சென்னை நகரப் போலீசுத் தனிக் குழு ஒன்று விரைந்து சென்றது என்றும், அப்போது அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் எதிரியைப் போலீசார் கைது செய்தனர் என்றும் அந்தக் குறிப்பு தெரிவிக்கிறது.

கண்ணன் கொலை வழக்கு — பொறுப்பு மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 18—

சிம்சன் 'குரூப்'பைச் சேர்ந்த செம்பியம் நிறுவனம் ஒன்றில், 'டைம்கீப்ப'ராகப் பணியாற்றிய கண்ணன் கொலை வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ள இலட்சுமிபதி என்பவரை பொறுப்பில் விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

குசேலர் பொறுப்பு மனு தள்ளுபடியாகியது

பிரதாபசந்திரன் கொலை வழக்கு சம்பந்தமாக இப்போது காவலில் உள்ள தொழிற் சங்கத் தலைவர் குசேலர், தம்மைப் பொறுப்பில் விடுதலை செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்திருந்த மனுவை பிரதம பிரசிடென்சி மாஜிஸ்திரேட் எஸ். நடராசன் தள்ளுபடி செய்தார்.

"இது சம்பந்தமான புலன் விசாரணை இன்னும் முடிவடையாததால், இந்தக் கட்டத்தில் பொறுப்பில் விடுதலை செய்வதற்கில்லை" என்று கூறி மாஜிஸ்திரேட் மனுவை நிராகரித்தார்.

மேலும் இரண்டு மாவட்டங்கள் — பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்படும்

சென்னை, ஜூலை 18—

"தமிழ்நாட்டில் மேலும் இரு மாவட்டங்கள், 'பிற்பட்ட மாவட்டங்கள்' என்று அறிவிக்கப்படும்; இதன் மூலம், அங்கு புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்காக மத்திய அரசிடமிருந்து 10 சதவிகிதம் உதவி மானியம் பெறும் தகுதி 2 மாவட்டங்களுக்கும் கிடைக்கும்"

என்று திட்டத் துறைத் துணையமைச்சர் மோகன தாரியா நிருபர்களிடம் தெரிவித்தார்; மேலும் அவர் கூறியதாவது:—

"தொழில்களில் போடப்படும் முதலீடு அடிப்படையில் 10 சதவிகிதம் உதவி மானியம் மதிப்பிடப்படும்.

பிற்பட்ட மாவட்டங்களில் தொழில்கள் நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கு மற்றும் நிதி உதவி நிறுவனச் சலுகைகள் கிடைக்கும்.

வேலை வாய்ப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ. 2 கோடி கிடைக்கும்; புதிய திட்டத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புத் தோதுக்களை அதிகப்படுத்தும் வகையில் வசதிகளைத் திரட்ட அரசு முன் வரும் என நம்புகிறேன்.

ஆந்திரத்தில் 6,000 இளைஞர்கள் சொந்தமாகத் தொழில்களைத் தொடங்குவர்; 25 000 பேருக்கு மேல் வேலை கிடைக்கும்.

தமிழ்நாட்டில் கிழக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை தாலுகா (திருச்சி), மேலூர் தாலுகா (மதுரை) ஆகியவைகள் பின்னடைந்த மாவட்ட இனத்தின் கீழ் வரும்; மாநில அரசு அந்த மாவட்டங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை."

தொழிற்சாலைகளில் முழு அளவு உற்பத்தி

சுதந்தர வெள்ளி விழாச் சூளுரை

புதுடில்லி ஜூலை 18—

"தொழிற்சாலைச் சாதன வசதிகளை முழு அளவுக்குப் பயன்படுத்துவோம்" என்பது, சுதந்தர வெள்ளி விழா ஆண்டில் தொழிற்துறையின் குறிக்கோள் வாசகமாக இருக்குமாம்.

சுதந்தர வெள்ளி விழா கொண்டாட்டம் சம்பந்தமாகத் தொழில் வளர்ச்சித் துறை அமைத்துள்ள குழு இவ்வாறு முடிவு செய்துள்ளது.

இந்தக் குழுவில், தொழிலதிபர்களும் — தொழிலாளர் விவகார நிபுணர்களும் உள்ளனர்.

உற்பத்தியைப் பெருக்கி — அதன் மூலம் தொழிலாளர்களின் போனசை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த வாசகம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

தவிர, அயல்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சாதனங்கள் — மூலப் பொருள்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக உள்ளூர்ப் பண்டங்களை அதிகமாகப் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படும்.

தக்க சூழ்நிலை நிலவும் தொழிற்சாலைகளில் எல்லாம், வாரத்தில் 7 நாட்களிலும் வேலை நடக்கும்; அதே சமயத்தில், தொழிலாளர்களின் வேலை நேரம் அதிகமாகிவிடாதபடி பார்த்துக் கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]